மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1987) நிறைவேற்றப்பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஔ) பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொது அறக்கட்டளைகள் மற்றும் நிலைக்கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) மூன்றாம் திருத்தச் சட்ட முன் வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொது அறக்கட்டளைகள் மற்றும் நிலைக்கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 50/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

---

* 16—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

1987 நவம்பர் 17]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொது அறக்கட்டளைகள் மற்றும் நிலைக்கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(அஅ) தமிழ்நாடு மாநில வீட்டுவசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வீட்டுவசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 43/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1961 ஆம் வருடத்திய இந்த சட்டத்திற்கு ஒரு திருத்தம் இப்போது முன் வைத்துள்ளதன் மூலம் a full time managing Director -ஐ', போர்ட்-னுடைய மெம்பராகவும் இருந்து அதனுடைய முழு நேர ஊழியராக இருந்து, அரசினுடைய பல்வேறு வீட்டுவசதிகள் முழுவதையும் நிர்வகிப் பதற்கும், அதற்கான நிதி நிலைகளையும், நிதி செலவுகளையும் கூட நிர்வகிப்பதற்கான நோக்கத்தோடு ஒரு a full time managing Director -ஐ நியமிக்கக்கூடிய இந்த திருத்தம் ஒரு நல்ல திருத்தம்தான். இந்தத் திருத்தத்தைப் பற்றி நமக்கு ஒன்றும் ஆட்சேபணையோ அல்லது மற்ற பிரச்சினைகளோ இல்லை. ஆனால் வீட்டு வசதி வாரியத்தினுடைய நடவடிக்கைகள் பற்றி ஒரு குறை. சரியான நிர்வாக நடவடிக்கைகள் அங்கே இல்லாத காரணத்தால் பெரும் குறைகள் இன்றையதினம்

* 12—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.